# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1912/36 - 2015 අප්‍රේල් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.04.30

*1912/36 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் அட்டம்பிட்டிய நீர் வழங்கல் செயற்றிட்டத்தின் கீழ் கட்டடம் மற்றும் உத்தியோகபூர்வ விடுதியினை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கிறேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, ஏப்பிறல் 06,
5/2/1/1117

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில் ஹாலி எல பிரதேச செயலாளர் பிரிவின் நெலுன்தண்ட கிராம அலுவலர் பிரிவில் அட்டம்பிட்டிய வத்தேகமவில் அமைந்துள்ள அட்டம்பிட்டிய எனும் காணியில் சுமார் 40 பேர்ச்சஸ் விஸ்தீரமுடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | முன்மொழியப்பட்ட காணியின் மிகுதித்துண்டு ; |
| கிழக்கு | : | கெட்டவல வீதி ; |
| தெற்கு | : | விளையாட்டு மைதானம் ; |
| மேற்கு | : | முன்மொழியப்பட்ட காணியின் மிகுதித்துண்டு. |

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி : காணிச் சீர்திருத்த ஆணைக்குழு,
கிரிகரி வீதி,
கொழும்பு 07.

5 - 406



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.